सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

சுதந்திரத் திருநாள்
அமுதப் பெருவிழா

மாண்புமிகு துணைநிலை ஆளுநர்

டாக்டர் **தமிழிசை சௌந்தரராஜன்** அவர்கள்

புதுச்சேரி சட்டப்பேரவையில் ஆற்றிய உரை

10 ஆகஸ்ட், 2022

மாண்புமிகு துணைநிலை ஆளுநர்

டாக்டர் **தமிழிசை சௌந்தரராஜன்** அவர்கள்

புதுச்சேரி சட்டப்பேரவையில்

ஆற்றிய உரை

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே யொழிய விடல். **- குறள்**

நன்மையே தருவதாக இருந்தாலும் நீதியை விட்டு விலகுவதால் வரும் லாபத்தை, அப்பொழுதே விட்டு விடுக.

மாண்புகெழுமிய சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே! மற்றும் மேன்மைமிகு இந்த அவையின் புகழ்மிக்க உறுப்பினர்களே!

முதலில் என் வணக்கத்தையும் மற்றும் வாழ்த்தையும் தெரிவித்துக்கொண்டு பதினைந்தாவது சட்டப்பேரவையின் மூன்றாவது கூட்டத்தொடருக்கு அனைவரையும் நான் வரவேற்கிறேன்.

2. **“ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று”** பாரதி வரிகளைப் போல ஆனந்தமாக இந்தியாவின் எழுபத்தைந்தாவது சுதந்திர தினத்தை கொண்டாடும் வகையில் முன்னேறி வரும் இந்தியாவின் எழுபத்தி ஐந்தாம் ஆண்டினை நினைவு கொள்வதில் நாம் அனைவரும் பெருமை

கொள்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொள்வதில் நான் உண்மையில் மகிழ்ச்சி அடைகிறேன். தனது மக்களின் புகழ்பெற்ற வரலாறு, சமூக-கலாச்சாரம், அரசியல், பொருளாதார அடையாளம், சாதனைகள் மற்றும் இந்தியா சுதந்திரம் பெற்று எழுபத்தைந்து ஆண்டுகள் நிறைவு செய்ததற்கு நாம் மரியாதை செய்யும் ஒரு முன்முயற்சியாக "சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா" நாடு முழுவதிலும் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாட்சிப்பரப்பில், "சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவின்" அதிகாரப்பூர்வ பயணம் தொடங்கப்பட்டு இந்த ஆண்டு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. அனைத்து அரசு நிகழ்ச்சிகளும் மற்றும் விழாக்களும் "சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா" கருப்பொருளின் அடிப்படையில் கொண்டாடப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

3. **"நோயால் தவிப்பதை விட தடுப்பதே மேல்"** என்ற வகையில் உலகம் முழுவதிலும் சமூக-பொருளாதார வளர்ச்சியை கடுமையாக பாதித்த கோவிட்-19 நோய்ப் பெருந்தொற்றின் தாக்கத்தை யாரும் மறந்திருக்க முடியாது. இந்த அரசு, மேற்கொண்ட தடுப்பூசி பரப்புரைகள் மற்றும் பல்வேறு உத்திகளை பின்பற்றுதல் போன்ற தீவிர முயற்சியின் காரணமாக கோவிட்-19ன் இரண்டாம் அலை எவ்விதமான கடுமையான பாதிப்புகள் ஏற்படுத்தாதவாறு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இருக்கும் சுகாதார

உள்கட்டமைப்புகளை கொண்டு சவால்களை எதிர்கொள்ளும் வலுவான நிலையில் நாம் உள்ளோம் என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.

4. **“பொருளாதார வளர்ச்சியே வாழ்வாதார வளர்ச்சி”** என்ற வகையில் நிதி நிலையைப் பொறுத்தவரை, இந்த அரசு 2021-22ல் மொத்த ஒதுக்கீடான ₹ 10,414 கோடியில், ₹ 9,793.29 கோடி அதாவது 94.04 விழுக்காடு செலவு செய்துள்ளது. இந்தச் செலவினம் கடந்த 4 ஆண்டுகளில் செய்த செலவினத்தை விட மிக அதிகமாகும். மேலும், வருவாய் இலக்கில் 104 விழுக்காடு என்கிற உயர்ந்த சாதனையை நாம் அடைந்துள்ளோம். நிர்ணயிக்கப்பட்ட கடன் பெறும் வரம்பை மீறாமல், கடன் வாங்கும் ஆதாரத்தை முடிவு செய்யும் இணக்கத்தை மத்திய அரசு நமக்கு வழங்கியுள்ளது. இது, குறைந்த வட்டியில் முழுக்கடனைப் பெற உதவியாக இருக்கிறது.

5. **“உற்பத்தி பெருக்கமே உயர்வைத்தரும்”** என்ற வகையில் ஒரு மாநிலத்தின் துறைசார்ந்த வளர்ச்சியை ஆய்வு செய்வதிலும் அத்துடன் பொருளாதார மேம்பாட்டை அளவீடு செய்வதிலும் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ஒரு முக்கிய குறியீடாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களிடம் நான் பகிர விரும்புகிறேன். ஒரு மாநில பொருளாதாரத்தின் முழுமையான மற்றும் தொடர்புடைய செயல்பாடுகள் ஆகிய இரண்டையும் தீர்மானிக்க தனிநபர் மாநில உள்நாட்டு உற்பத்தி பயன்படுகிறது. இவ்வாட்சிப்பரப்பின், 2021-22ஆம் ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு

உற்பத்தியாக ₹ 38,285 கோடி (நடப்பு விலை) என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2020-21ஆம் ஆண்டைவிட 2.90 விழுக்காடு கூடுதலாகும். புதுச்சேரியின் தனிநபர் வருமானம் 2020-21ஆம் ஆண்டில் ₹ 2,15,583 (நடப்பு விலை) லிருந்து 2021-22ஆம் ஆண்டில் ₹ 2,16,495 ஆக (நடப்பு விலை) உயர்ந்துள்ளது. இது 0.42 விழுக்காடு வளர்ச்சியைக் காட்டுகிறது.

6. இத்துடன், கடந்த 2021-22ஆம் ஆண்டில் வெவ்வேறு துறைகளின்கீழ் இந்த அரசால் நிறைவேற்றப்பட்டுள்ள பெரும் திட்டங்கள் மற்றும் சாதனைகள் சிலவற்றின் சிறப்புக் கூறுகளை எடுத்துக்கூற விழைகிறேன்.

வேளாண் மற்றும் விவசாயிகள் நலம்

7. **தொழில் நுட்பம் உழவனுக்கு தோழனாக, "விஞ்ஞான அணுகு முறை விளைச்சலை விரிவாக்கும்"** என்ற வகையில் அறிவியல் அடிப்படையில் தோட்டக் கலையிலும் மற்றும் திட்டமிட்ட செயல்பாட்டினால் விவசாயத்திலும் உற்பத்தியை அதிகரித்து மற்றும் தொழில் நுட்ப அடிப்படையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி விவசாய சமூகத்தினரின் வருவாய் அதிகரிப்பதை உறுதிபடுத்தியதன் மூலம் இந்த அரசு விவசாய சமூக நலனில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளதை காட்டுகிறது.

8. வேளாண் பொருட்களின் உற்பத்தியை பெருக்க பெரிய அளவிலான மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்களை கடைப்பிடித்தலை ஊக்கப்படுத்தும் பொருட்டு பயிர்களுக்கான உற்பத்தி மானியத்தை நேரடிப் பணப் பயனாக நெற்பயிருக்கு 2 பருவங்களுக்கு ஏக்கருக்கு ₹ 10,000-ம், கரும்பு மற்றும் பருத்தி பயிர்களுக்கு ஏக்கருக்கு ₹ 10,000-ம், எள் பயிர் சாகுபடி செய்திட ஏக்கருக்கு ₹ 3,000-ம், மணிலாப்பயிருக்கு ஏக்கருக்கு ₹ 5,000-ம், பயறு வகைகளுக்கு ஏக்கருக்கு ₹ 2,000-ம், சிறுதானியப் பயிர்களுக்கு ஏக்கருக்கு ₹ 5,000-ம், தீவனப் பயிர்களுக்கு ஏக்கருக்கு ₹ 8,000-ம், விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், 2021-22ஆம் ஆண்டில் புதுச்சேரி பகுதியில் 9,493 விவசாயிகள் பயன்பெறும் வகையில் ₹ 6.24 கோடியும் மற்றும் காரைக்கால் பகுதியில் 7,082 விவசாயிகள் பயன்பெறும் வகையில் ₹ 6.94 கோடியும் உற்பத்தி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

9. **“தோட்டக்கலை நாட்டுக்கலையாக மட்டுமல்ல வீட்டுக்கலையாகவும்”** கொண்டாடும் வகையில் அறுவடைக்கு பிந்தைய மானியமாக வாழைப் பயிருக்கு ஏக்கருக்கு ₹ 12,000-ம், நாட்டுக்காய்கறிகளுக்கு ஏக்கருக்கு ₹ 12,500-ம், குளிர்கால காய்கறிகளுக்கு ஏக்கருக்கு ₹ 18,750-ம் மற்றும் கொடி வகை காய்கறிகளுக்கு ஏக்கருக்கு ₹ 6,250-ம் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ₹ 86.71 இலட்சம் செலவு செய்யப்பட்டதில் புதுச்சேரி பகுதியில் 2,112 விவசாயிகளும் மற்றும் காரைக்கால் பகுதியில்

20 விவசாயிகளும் பயனடைந்துள்ளனர். புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியில் வீட்டுத் தோட்டங்கள் அமைப்பதை ஊக்கப்படுத்தும் விதமாக கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள பொது மக்களுக்கு 3,600 காய்கறி விதைகள் அடங்கிய சிறு பைகளும் மற்றும் 200 பழங்கன்று அடங்கிய சிறு பைகளும் ₹ 8.50 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. 706 ஹெக்டேரில் தென்னை சாகுபடி செய்திட 1,997 விவசாயிகளுக்கு ₹ 53 இலட்சமும் மற்றும் மரவள்ளி சாகுபடிக்காக 230 விவசாயிகளுக்கு ₹ 15 இலட்சமும் உற்பத்தி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. தென்னை வளர்ச்சி வாரியத் திட்டத்தின்கீழ், 42 விவசாயிகளுக்கு மாதிரி திடல் அமைத்திட ₹ 3.66 இலட்சமும் மற்றும் தரமான தென்னை நாற்றுகள் உற்பத்தி செய்திட மற்றும் மாதிரி திடல்கள் அமைத்திட அரசு பண்ணைகள் / வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நிதி உதவியாக ₹ 4.18 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

10. தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் மூலம் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் சிப்பம் கட்டும் அறை (Pack House) அமைத்திட 2 பயனாளிகளுக்கு ₹ 4 இலட்சமும் மற்றும் காளான் உற்பத்தி மையங்கள் அமைத்திட 12 பயனாளிகளுக்கு ₹ 20 இலட்சமும் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. தோட்டக்கலை பயிர்களின் சாகுபடி பரப்பளவை அதிகரித்திட 183 ஹெக்டேருக்கு

அறுவடைக்கு பிந்தைய மானியமாக 515 விவசாயிகளுக்கு ₹ 29.42 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. நெகிழி மூடாக்கு (Plastic Mulching) அமைத்திட 10 பயனாளிகளுக்கு மானியமாக ₹ 1.36 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. நிழல் வலைக் கூடம் அமைத்திட ஒரு விவசாயிக்கு மானியமாக ₹ 3.12 இலட்சமும் மற்றும் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் விதமாக நிரந்தர மண் புழு உற்பத்திக் கூடங்கள் அமைத்திட 7 விவசாயிகளுக்கு மானியமாக ₹ 3.14 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. நீர் ஆதாரங்கள் மற்றும் நீர் சேகரிப்பு அமைப்பை உருவாக்கும் திட்டத்தின்கீழ், காரைக்கால் பகுதியில் பண்ணைக் குட்டைகள் அமைத்திட 3 பயனாளிகளுக்கு நிதி உதவியாக ₹ 2.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

11. "வேளாண் இயந்திரங்கள் உழவனின் உற்பத்திக்குத் தோழன்" என்ற வகையில் வேளாண் இயந்திரமயமாக்கல் துணைத் திட்டத்தின்கீழ், புதுச்சேரி பகுதியில் உள்ள 37 பொது விவசாயிகளுக்கும் மற்றும் 13 அட்டவணை இன விவசாயிகளுக்கும் 31 டிராக்டர்கள், 10 பவர் டில்லர்கள், 6 தானியங்கி இயந்திரங்கள் மற்றும் 3 டிராக்டர்கள் மூலம் இயக்கப்படும் வேளாண் இயந்திரங்கள் வாங்க மானியமாக ₹ 90.37 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், காரைக்கால் பகுதியில் 4 பொது விவசாயிகளுக்கும் மற்றும் ஒரு அட்டவணை இன விவசாயிக்கும் 4 டிராக்டர்கள், ஒரு பவர் டில்லர் வாங்க மானியமாக ₹ 14.99 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

பாரதப் பிரதமரின் பயிர்க் காப்பீடு திட்டத்தின்கீழ், 2019-20ஆம் ஆண்டிற்கான ரபி பருவ பயிர்க்காப்பீட்டுத் தொகையாக ₹ 7.15 கோடியை தேசியக் காப்பீட்டு நிறுவனம் 9,085 விவசாயிகளுக்கு 2021-22ஆம் ஆண்டில் வழங்கியுள்ளது. மேலும், 2,343 ஹெக்டேர் காரீஃப் 2021 மற்றும் 9,000 ஹெக்டேர் ரபி 2021-22 பருவங்களில் புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதியில் உள்ள 13,178 விவசாயிகள் இந்த பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலம்

12. **“கால்நடைகள் உழவனின் குடும்பத்தில் உற்ற துணைகள்”** என்ற வகையில் விவசாயிகளுக்கு துணை வருமானத்தை உருவாக்கி மற்றும் புரதச்சத்துமிக்க உணவை உற்பத்தி செய்வதை கருத்தில் கொண்டு நிலையான கால்நடை உற்பத்தி மற்றும் அவற்றின் நலத்திற்கு இந்த அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

13. 2021-22ஆம் ஆண்டில் 2,13,636 கால்நடைகள், கோழிகள் மற்றும் செல்லப் பிராணிகளுக்கு இலவசச் சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 38,488 கால்நடைகள், கோழிகள் மற்றும் செல்லப் பிராணிகளுக்கு தடுப்பூசிகளும் போடப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் நம் விருப்பத்திற்கேற்ப உயர் ரக கலப்பின கால்நடை கன்றுகளை உற்பத்தி செய்ய 36,281 செயற்கைமுறை கருவூட்டல்கள்

செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம், 5,246 உயர் ரக மரபு கூற்றைக் கொண்ட கலப்பினக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், 400 ஆடுகளுக்கு உயர் ரக மலபாரி இன சினை ஊசிகளும் போடப்பட்டுள்ளன. நோயுற்ற கால்நடைகளுக்கு அவசர சிகிச்சை அளிப்பதற்காக 24 மணி நேர அவசர சிகிச்சை மையம் புதுச்சேரி கால்நடை இயக்குனரகத்தில் செயல்பட்டு வருகிறது.

14. கால்நடை மருத்துவக் கல்விக்காக, புதுச்சேரியில் உள்ள ராஜிவ் காந்தி கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு உதவிக் கொடையாக ₹ 19.02 கோடி வழங்கப்பட்டுள்ளது. கால்நடை விவசாயிகளுக்கு, ராஜிவ் காந்தி கால்நடை மருத்துவக் கல்லூரியால் தயாரிக்கப்பட்ட புதுச்சேரி மண்ணின் தன்மைக்கு ஏற்ற தாது உப்புக் கலவை கால்நடைகளின் உடல்நலத்தை மேம்படுத்துவதிலும் மற்றும் பால் உற்பத்தியை அதிகரிப்பதிலும் பெரும் பங்காற்றியுள்ளது. இந்த முன்னோடித் திட்டத்தின்கீழ், கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலத்துறை, பாண்லே உடன் இணைந்து சுமார் 5,000 கிலோ தாது உப்புக் கலவையை மூன்று கிராமங்களுக்கு பேரிடர் காலங்களில் கால்நடை விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது. இதன் பயனாக கோர்க்காடு, பூரணாங்குப்பம் மற்றும் கொம்பாக்கம் ஆகிய கிராமங்களில் முறையே 4.02 விழுக்காடு, 5.3 விழுக்காடு மற்றும் 8.67 விழுக்காடு அளவுக்கு பால் உற்பத்தி அதிகரித்துள்ளது.

இதன் மூலம், விவசாயிகள் தங்கள் கறவை மாடுகளுக்கு தாது உப்புக் கலவையை தொடர்ந்து வழங்கி வந்தால் பால் உற்பத்தி அதிகரிக்கும் என்பது உறுதியாகிறது.

15. “விவசாயத் தொழில் நுட்ப மேலாண்மை நிறுவன” திட்டத்தின்கீழ், காலாப்பட்டு மற்றும் தவளகுப்பம் ஆகிய கிராமங்களில் உள்ள 71 கால்நடை விவசாயிகளுக்கு கால்நடை தீவனப்பயிர் வளர்ப்பு மற்றும் பராமரிப்புக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. “தேசிய நகர்ப்புற வாழ்வாதார” திட்டத்தின்கீழ், புதுச்சேரி நகராட்சி பகுதியில் உள்ள 30 சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு பால் மதிப்புக் கூட்டு பொருட்கள் உற்பத்தி குறித்து பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

கலை மற்றும் பண்பாடு

16. **“கலை வளர்ச்சி மக்களை களிப்புறச் செய்யும்”** என்ற வகையில் ஒரு நாட்டின் வளர்ச்சியில் கலை மற்றும் பண்பாடு முக்கியப் பங்காற்றுகிறது. அனைத்து சமூக-பொருளாதார, மற்றும் இதர நடவடிக்கைகளில், நம்முடைய கலாச்சாரமும் மற்றும் படைப்பாற்றலும் வெளிப்படுத்தப்படுகின்றன. இந்த அரசு, 182 நலிவுற்ற கலைஞர்கள், 5 தமிழ் அறிஞர்கள் மற்றும் 70 கலைமாமணி விருது பெற்றவர்களை ஊக்கப்படுத்தும் பொருட்டு உதவித் தொகையாக ₹ 45.90 இலட்சம் வழங்கியுள்ளது.

இது அவர்களின் வயதின் அடிப்படையில் 59 வயது வரை உள்ளவர்களுக்கு ₹ 1,650-ம், 60 முதல் 79 வயது வரை உள்ளவர்களுக்கு ₹ 2,200-ம், மற்றும் 80 வயது மற்றும் அதைவிட அதிக வயதுடையவர்களுக்கு ₹ 3,250-ம் வழங்கப்பட்டுள்ளது.

17. **“நாட்டுப்புற கலைகள் நாட்டின் நாடித்துடிப்பு”** என்ற வகையில் கொரோனா பெருந்தொற்று காலங்களில் கலைஞர்களுக்கு உதவிடும் வகையில் தஞ்சை தென்னகப் பண்பாட்டு மையத்துடன் இணைந்து இணையவழி மூலம் நாட்டுப்புற நடனம் மற்றும் இசை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதில், 35 நாட்டுப்புற நடனம் / இசைக் கலைஞர் குழுக்களுக்கு தலா ₹ 15,000 வீதம் ₹ 5.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. நலிவடைந்த கலைஞர்கள், தமிழ் அறிஞர்கள் மற்றும் கலைமாமணி / தமிழ்மாமணி / தெலுங்கு ரத்னா / மலையாள ரத்னா விருது பெற்றவர்களுக்கான நிதி உதவி ₹ 500 உயர்த்தப்பட்டுள்ளது.

18. எழுபத்தைந்தாவது சுதந்திரத் தினத்தை ஒட்டி கொண்டாடப்பட்ட “சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவில்” தொடர் கலாச்சார நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அதன்படி, பத்து கலாச்சார நிகழ்ச்சிகள் 17 நாட்களும் மற்றும் முத்திரை வார விழா 5 நாட்களும் புதுச்சேரி கடற்கரைச் சாலையில் உள்ள காந்தி திடலில் நடத்தப்பட்டதில்

நாட்டியம், ஓவியம் மற்றும் மணல் சிற்ப முகாம்கள் இடம் பெற்றன, மற்றும் காரைக்காலில் 2 நாட்களுக்கு இரு நாட்டுப்புற நடன நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

19. **"புத்தகங்கள் வாழ்வை புதுப்பிக்கும்"** என்ற வகையில் அட்டவணை இன மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் செயல்படும், அரசு கிளை நூலகங்களுக்கு அட்டவணை இன இளைஞர்கள் பயன்பெறும் வகையில் தொழில் வழிகாட்டும் புத்தகங்கள் ₹ 12 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன. காரைக்காலில் உள்ள டாக்டர் எஸ்.ஆர். ரங்கநாதன் அரசு நூலகத்தை நவீனமயமாக்கும் பணிகள் ₹ 76 இலட்சம் செலவில் நிறைவுபெற்றுள்ளன.

குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள்

20. **"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"** என்ற வகையில் கடந்த நிதி ஆண்டில், அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்திற்காக, மத்திய அரசு மாதந்தோறும் ₹ 12.05 கோடி செலவு செய்துள்ளது. இதன்மூலம், மாதந்தோறும் சுமார் 1.78 இலட்சம் குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்கள் பயனடைந்துள்ளனர். அதேபோல், புதுச்சேரி அரசு செயல்படுத்திவரும் இலவச அரிசித் திட்டத்தின்கீழ், வடகிழக்கு தொடர் பருவமழை 2021ன் பாதிப்பில் இருந்து மீளும் பொருட்டு மழை நிவாரணமாக மிகவும்

ஏழ்மை நிலையில் உள்ள / வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள ஒவ்வொரு குடும்ப அட்டைத்தாரர்களுக்கு ₹ 5,000-ம் மற்றும் வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள ஒவ்வொரு குடும்ப அட்டைத்தாரர்களுக்கு ₹ 4,500-ம் நேரடியாக அட்டைதாரர்களின் வங்கிக் கணக்குகளில் செலுத்தப்பட்டுள்ளது. இந்த மழை நிவாரணத்திற்காக இந்த அரசு 2021-22ஆம் நிதி ஆண்டில் ₹ 156 கோடி செலவு செய்துள்ளது. இதன் மூலம், சுமார் 3.28 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் பயனடைந்துள்ளனர்.

கூட்டுறவு

21. “**கூட்டுறவே நாட்டுயர்வு**” என்ற வகையில் பாண்டெக்ஸ், பாண்பேப் மற்றும் புதுச்சேரி, மாகி பகுதிகளில் இயங்கி வரும் 11 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கைத்தறி மேம்பாட்டு திட்டத்திற்காக ₹ 46.31 இலட்சமும் மற்றும் நெசவாளர்கள் நலத் திட்டத்திற்காக ₹ 45.45 இலட்சமும், உதவிக் கொடையாக வழங்கப்பட்டுள்ளது. கிராமப்புற மக்களுக்கு வங்கி சேவைகள் சென்றடைவதற்காக நபார்ட் வங்கியின் நிதி உதவியுடன் புதிய தானியங்கி பணப்பட்டுவாடா வாகனம் ஒன்றை புதுச்சேரி மாநில கூட்டுறவு வங்கி வாங்கியுள்ளது. சர்க்கரை ஆலை ஊழியர்களுக்கு சம்பளங்கள், ஊதியங்கள் மற்றும் இதர நிலுவைத் தொகையினை வழங்குவதற்காக புதுச்சேரி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு ₹ 34 கோடி வழங்கப்பட்டுள்ளது.

சுகாதாரம் மற்றும் குடும்ப நலம்

22. **“தடுப்பூசியே தற்காப்பு ஆயுதம்”** என்ற வகையில் கோவிட்-19 பரவல் உலக அளவில் மனித உயிர்களுக்கு பெரும் இழப்பையும், உணவு முறைகள், பொது சுகாதாரம் மற்றும் உலக அளவிலான வேலை வாய்ப்புகளில் எதிர்பாராத சவால்களையும் ஏற்படுத்தியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்தப் பரவலினால் ஏற்பட்ட சமூக மற்றும் பொருளாதார பாதிப்புகள் அழிவுகரமானது. இந்த அரசால் திறம்பட மேற்கொள்ளப்பட்ட தீவிர முயற்சியின் காரணமாக தற்போது இந்த நோய் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 2021-22ல், சுமார் 90 விழுக்காடு மக்களுக்கு முதல் தவணை கோவிட்-19 தடுப்பூசியும் மற்றும் சுமார் 71 விழுக்காடு மக்களுக்கு இரண்டாம் தவணை கோவிட்-19 தடுப்பூசியும் போடப்பட்டுள்ளது.

23. **“நல்ல சுகம் தருவதே நல்ல சுகாதார நிலையங்கள்”** என்ற வகையில் நமது நாட்டிலுள்ள மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் இருக்கும் சுகாதார நலவாழ்வு மையங்களுக்கிடையிலான அகில இந்திய தரவரிசையில் புதுச்சேரி முதல் இடம் பிடித்துள்ளது என்பதை இந்த தருணத்தில் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். ஆரம்ப சுகாதார நிலையங்கள் / நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் / துணை சுகாதார நிலையங்களை, சுகாதார நலவாழ்வு மையங்களாக மாற்றுவதற்காக

நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 44-ல் அனைத்து 126 மையங்களும் சுகாதார நலவாழ்வு மையங்களாக மாற்றப்பட்டுள்ளன. தொற்று இல்லாத நோய்கள், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், வாயில் ஏற்படும் நோய்கள், மனநலம், முதியோர் மருத்துவம், நோய்த் தடுப்பு மருத்துவம் மற்றும் அவசர மருத்துவ பராமரிப்பு சேவைகள் போன்ற புதிய சேவை தொகுப்புகளை அறிமுகப்படுத்துதல், தற்போதுள்ள இனப்பெருக்க மற்றும் குழந்தைகள் நலன் மற்றும் தொற்றுநோய்கள் தொடர்பான சேவைகளை வலுப்படுத்துதல் உள்ளிட்ட விரிவாக்கப்பட்ட சேவைகளை அனைத்து சுகாதார நலவாழ்வு மையங்களும் வழங்கி வருகின்றன.

24. "அரசு மருத்துவமனைகளே அடித்தட்டு மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை" என்ற வகையில் கடந்த ஆண்டு, புதுச்சேரியில் உள்ள இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்டமேற்படிப்பு நிறுவனத்தில் (i) கோவிட் பெருந்தொற்று காலத்தில் RT PCR TRUENAT வகை பரிசோதனை முறையை பயன்பாட்டுக்கு கொண்டுவருதல், (ii) உள் நோயாளிகள் வளாகத்தில் இருக்கும் அனைத்து படுக்கைகளையும் பிராணவாயு வசதி கொண்டதாக மாற்றுதல், (iii) சிறுநீரக தீவிரச் சிகிச்சைப் பிரிவை மேம்படுத்துதல், (iv) நரம்பியல் துறையின்கீழ் பக்கவாத சிகிச்சைக்கான பிரிவை தொடங்குதல், (v) தீவிர இருதய பராமரிப்புப் பிரிவை புதுப்பித்தல், (vi) இருதய மார்பு இரத்தநாள அறுவை

சிகிச்சை சேவையை மீண்டும் தொடங்குதல், (vii) தன்வந்திரி வளாகம், உள்நோயாளிகள் வளாகம் மற்றும் அகத்தியர் வளாகத்தில் உள்ள மின் உயர்த்தியை நவீனமயமாக்குதல் உள்ளடங்கிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுகாதார சேவைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

25. ஏனாம் பொது மருத்துவமனையில் (i) தீவிர சிகிச்சைப் பிரிவு உட்பட 70 படுக்கைகளுக்கு தொகுப்பு முறையிலான பிராணவாயுவை வழங்குவதற்கு குழாய் கட்டமைப்பை அமைத்தல், (ii) ஒரு நிமிடத்துக்கு 100 லிட்டர் பிராணவாயுவை உற்பத்தி செய்யும் அலகு கட்டமைக்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டுவருதல், (iii) 2 தீவிர சிகிச்சைப் பிரிவு அறைகள் அவசரகால பயன்பாட்டுக்காக நிறுவுதல், (iv) பிராணவாயு தடையில்லாமல் கிடைப்பதற்கு 73 D-வகை உருளைகளை ஏற்படுத்துதல், (v) 30 பிராணவாயு செறிவூட்டிகள் மற்றும் (vi) பெருந்தொற்று காலத்தை கையாளும் வகையில் 14 பல்நோக்கு கண்காணிப்பு கருவிகள் போன்ற உயிரைக் காப்பதற்கான அத்தியாவசிய உபகரணங்களும் மற்றும் சேவைகளும் வழங்கப்பட்டுள்ளன.

26. **“தவழும் குழந்தைகளை தவிக்கவிடாமல் நோய்த்தடுப்பின் பங்காக”** தொண்டை அடைப்பான் நோய், கக்குவான் இருமல், இரணஜன்னி, இளம் பிள்ளைவாதம், தட்டம்மை, ஜெர்மன் தட்டம்மை, காசநோய், கல்லீரல் அழற்சி-B, மூலைக்காய்ச்சல் /

நிமோனியா, ரோட்டோ வைரஸால் குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்றுப்போக்கு மற்றும் நியுமோகோக்கல் போன்ற தடுப்பூசியால் தடுக்கக்கூடிய 11 நோய்களை தடுப்பதற்காக கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து 100 விழுக்காடு தடுப்பூசித் திட்டத்தின் நிறைவு அளவை இவ்வாட்சிப்பரப்பு எட்டியுள்ளது பாராட்டதக்க செயல் ஆகும். குழந்தைகளுக்கு நியுமோகோக்கலால் ஏற்படும் நோயினையும் மற்றும் இறப்பையும் தடுத்து பயன் அளிக்கும் வகையில் நுரையீரல் அழற்சிக்கான தடுப்பு மருந்தை (Pneumococcal Conjugate Vaccine) இந்த அரசு அறிமுகம் செய்துள்ளது. புதுச்சேரி, ராஜிவ் காந்தி அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் மருத்துவ சேவைகளை மேம்படுத்தும் விதமாக கருவிலிருக்கும் குழந்தையின் இதயத்துடிப்பை பதிவு செய்யும் புதிய கம்பியில்லா இயந்திரமும் (Cardiotocography), செயற்கை சுவாசக் கருவிகளும், பிராணவாயு செறிவூட்டிகளும், பத்து CPAP/BPAP இயந்திரமும், PSA பிராணவாயு உற்பத்தி செய்யும் நிலையமும் உருவாக்கப்பட்டுள்ளது.

உயர் மற்றும் தொழில் நுட்பக்கல்வி

27. **“உயர்கல்விக்கு உயர்வூட்டும்”** வகையில் உயர் கல்வியின் குறிக்கோளானது, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, தொழில் துறையில் உற்பத்தியை அதிகரித்து, திறன்மிக்க மனித ஆற்றலை உருவாக்கி ஒரு நாட்டின் மனிதவள மேம்பாட்டில் முக்கிய பங்கு

வகிப்பதே ஆகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வர். உயர் மற்றும் தொழில் நுட்பக் கல்வியை ஊக்கப்படுத்தும் விதமாக சென்டாக் (CENTAC) மூலமாக சேர்க்கை பெற்று தொழில் முறை உயர்கல்வியை பயிலும் மாணவர்களுக்கு இந்த அரசு தொடர்ந்து நிதி உதவியை வழங்கி வருகிறது என்பது நன்கு அறிந்ததே. அதன் அடிப்படையில் 900 மருத்துவக்கல்வி மாணவர்கள், 7,290 பொறியியல் கல்வி மாணவர்கள் மற்றும் 1,024 செவிலியர் கல்வி மாணவர்கள் அடங்களாக மொத்தம் 9,214 மாணவர்கள் பயன்பெறுவதற்காக ₹ 40 கோடி வழங்கப்பட்டுள்ளது.

28. தேசிய திட்டமிடுகை மற்றும் கட்டிடக்கலை பள்ளி ஒன்றை நிறுவுவதற்காக ₹ 334.30 கோடி மதிப்பீட்டில் விரிவானத் திட்ட அறிக்கை மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது என்பது இந்த அரசின் ஒரு ஆக்கப்பூர்வமான முன் முயற்சியாகும்.

மீன்வளம் மற்றும் மீனவர் நலம்

29. **“கடல்வளம் காக்கும் கனிவுரு முயற்சியாக”** வேலைவாய்ப்பு, உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு, அந்நியச் செலாவணியில் வருவாயை ஈட்டுதல் குறிப்பாக மீனவ மக்களின் வருவாயை பெருக்குவதிலும் மற்றும் பொருளாதார மேம்பாட்டிலும் மீன்வளம்

மற்றும் மீன்வளர்ப்பு முக்கிய பங்கினை வகிக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இந்த உண்மை நிலையை அறிந்த இந்த அரசு பல்வேறு திட்டங்களின் வாயிலாக மீனவர் மற்றும் மீனவர் நலனை பாதுகாத்து வருகிறது. அதன்படி, புதுச்சேரி, காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் பகுதிகளில் 61 நாட்கள் மீன்பிடி தடைக்கால நிவாரணமாக 18,199 மீனவக் குடும்பங்களுக்கு தலா ₹ 5,500 வீதம் ₹ 10 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், மழைக்கால நிவாரணமாக மீனவக் குடும்பம் ஒன்றிற்கு ₹ 2,500 வீதம் 17,406 மீனவக் குடும்பங்களுக்கு ₹ 4.35 கோடி வழங்கப்பட்டுள்ளது.

30. இவ்வாட்சிப்பரப்பில், 577 புதிய பயனாளிகளையும் சேர்த்து தற்போது இருக்கும் 7,973 மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்த முதியோர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியமாக மொத்தம் ₹ 15.91 கோடி வழங்கப்பட்டுள்ளது. மீனவர் ஓய்வூதியத்திற்கான நிதி உதவி 50 முதல் 59 வயது வரை உள்ளவர்களுக்கு ₹ 1,570லிருந்து ₹ 2,500 ஆகவும், 60 முதல் 79 வயது வரை உள்ளவர்களுக்கு ₹ 2,090 லிருந்து ₹ 3,000 ஆகவும் மற்றும் 80 வயது மற்றும் அதற்குமேல் உள்ளவர்களுக்கு ₹ 3,135லிருந்து ₹ 4,000 ஆகவும், நவம்பர் 2021 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

31. இவ்வாட்சிப்பரப்பில், உயிரிழந்த ஆறு மீனவக் குடும்பங்களின் வாரிசுத்தாரர்களுக்கு உடனடி இறப்பு நிவாரணமாக ₹ 2 இலட்சம் வீதம் மொத்தம் ₹ 12 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட விசைப்படகு உரிமையாளர்களுக்கு மீன்பிடி தடைக்காலத்தில் மீன்பிடி படகுகளை பராமரிக்க ஆகும் செலவை வழங்கும் திட்டத்தின்கீழ் 352 பதிவு செய்யப்பட்ட விசைப்படகு உரிமையாளர்களுக்கு ₹ 63.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. வருடாந்திரக் காப்பீட்டுச் சந்தா தொகையில் 75 விழுக்காடு மானியமாக ₹ 10.85 இலட்சம் பதிவு பெற்ற 221 மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்களுக்கு தங்களின் விசைப்படகை காப்பீடு செய்வதற்காக கடந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ளது. மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ், மீன்பிடி உபகரணங்கள் வாங்குவதற்கு 50 விழுக்காடு மானியமாக ₹ 15.41 இலட்சம் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

32. **“மீன்பிடி தடையால் வாழ்வு தடைபடாமல்”** இருக்க பாரதப் பிரதமரின் “மத்ஸ்ய சம்பதா யோஜனா” திட்டத்தின் துணைத் திட்டமான மீன்பிடித்தடைகாலம் / மழைக்காலங்களில் சமூக-பொருளாதாரத்தில் பின்தங்கி பாரம்பரியமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவக் குடும்பங்களுக்கு வாழ்வாதார மற்றும் ஊட்டச்சத்து உதவி அளித்து மீன்வளத்தை பாதுகாக்கும் திட்டத்தின்கீழ், மொத்தம் உள்ள 21,371 பயனாளிகளுக்கு மத்திய அரசின் பங்களிப்பையும் மற்றும் பயனாளிகளின் பங்களிப்பையும் சேர்த்து ₹ 9.61 கோடி பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது.

33. மத்திய மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களின்கீழ், மீனவர்கள் பயன்பெறும் வகையிலும் மற்றும் இயற்கை சீற்றங்களின்போது உதவும் பொருட்டும், புதுச்சேரியில் உள்ள அனைத்து கடலோர மீனவக் கிராமங்களில் முகாம் அலுவலகங்கள் அமைக்கப்பட்டு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் உள்ள அனைத்து மீனவர்களையும் புயல் மற்றும் மோசமான வானிலை குறித்து எந்தவிதமான காலதாமதமின்றி விரைவாக எச்சரிக்கும் வண்ணம் குறுஞ்செய்தி (SMS) வசதி செயல்படுத்தப்பட்டுள்ளது. இதனால், மீனவர்கள் புயல் முன்னெச்சரிக்கையாகக் கடலில் மீன்பிடிக்க செல்லாமல் இருக்கவும், ஏற்கனவே கடலுக்கு சென்ற மீனவர்கள் உடனடியாக கரை திரும்பவும் இது மிகவும் உறுதுணையாக இருக்கும்.

இந்து அறநிலையத் துறை

34. **“அறம் வளர்க்கும் அறநிலையத் துறை வழிபாட்டு தளங்களின் வழிகாட்டியாக”** கோயில்களின் வெளிப்படையான நிர்வாகத்திற்கு, புவியியல் தகவல் அமைப்பு (Geographic Information System) மற்றும் கைப்பேசி செயலி உள்ளடங்களாக ஒருங்கிணைந்த கோயில் நிர்வாக அமைப்புக்கான இணையத்தளம் தொடங்கப்பட்டுள்ளது. புதுச்சேரி பகுதியில் உள்ள 5 கோயில்களிலும் மற்றும் காரைக்கால் பகுதியில் உள்ள 2 கோயில்களிலும்

அன்னதானத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்து அறநிலையத் துறையின்கீழ் உள்ள மற்றும் கட்டுப்பாட்டில் வராத திருக்கோயில்களைச் சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ள ₹ 2.42 கோடி மானியக் கொடையாக வழங்கப்பட்டுள்ளது. புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் உள்ள நலிவுற்ற 200 திருக்கோயில்களில் ஒரு கால பூஜை செய்விக்க கோயில் ஒன்றுக்கு ஆண்டுக்கு ₹ 20,000 வீதம் ₹ 40 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் உள்ள 7 கோயில்களுக்கு குடமுழுக்கு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. வக்ஃபு வாரியத்தில் பதிவு பெற்ற 10 உலமாக்களுக்கு மாதாந்திர ஓய்வூதியமாக தலா ₹ 2,000-ம் மற்றும் 1,000 சிறுபான்மையின இஸ்லாமிய மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகையாக ₹ 21 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. பதிவு பெற்ற 3 பள்ளிவாசல்களை சீரமைப்பதற்காக புதுச்சேரி வக்ஃபு வாரியத்தின் மூலம் ₹ 23.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தொழில்கள்

35. “மக்களின் வாழ்வு செழிக்க வளரும் தொழில்கள் அவசியம்” என்ற அடிப்படையில் இவ்வாட்சிப்பரப்பின், தொழில் துறை வளர்ச்சியை மேம்படுத்துவதில் இந்த அரசு மிகுந்த ஆர்வமாக உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துக்கொள்வர். அதன்படி, பயிற்சித் திட்டத்தின்கீழ், 126 படித்த வேலையில்லா

இளைஞர்களுக்கு பல்வேறு வர்த்தகங்களில் உதவித்தொகையுடன் தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதில் 32 நபர்கள், அட்டவணை இனத்தைச் சேர்ந்தவர்களாவர், மேலும், புதிய குழுக்களுக்கும் தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதில், 78 நபர்கள் பயிற்சி பெறுகின்றனர். மேலும், சென்னை, தேசிய சிறு தொழில்கள் கழகம் மூலம் மேம்பட்ட / உயர் திறன் பயிற்சிகள் அளிக்க 123 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

36. கைவினைத் தொழில்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 150 வேலையில்லா கிராமப்புற இளைஞர்களுக்கு உதவித்தொகையுடன் கூடிய கைவினைப் பயிற்சிகள் அளிக்கப்பட்டதில் 31 நபர்கள் அட்டவணை இனத்தைச் சேர்ந்தவர்களாவர். மேலும், புதிய குழுக்களுக்கு கைவினைப் பயிற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதில் ₹ 56.60 இலட்சம் மதிப்பீட்டு செலவில் 180 நபர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. தென்னை நார் தொழில்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 89 நபர்களுக்கு ஊக்கத் தொகையுடன் கூடிய கயிறு திரித்தல் மற்றும் கயிறு மிதியடி தயாரித்தல் ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டதில் 15 நபர்கள் அட்டவணை இனத்தைச் சேர்ந்தவர்களாவர். மேலும், இத்திட்டத்தின்கீழ், புதிய குழுக்களுக்கு தென்னை நார் பயிற்சிகள் தொடங்கப்பட்டு ₹ 65.56 இலட்சம் செலவில் 120 நபர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

37. இளைஞர்கள் "வேலை தேடுபவர்களாக இல்லாமல் வேலை அளிப்பவர்களாக இருக்க வேண்டும்" என்ற அடிப்படையில் வேலையில்லா இளைஞர்கள் சுய தொழில் தொடங்குவதை ஊக்குவிக்கும் விதமாக 134 தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க ₹ 37.03 இலட்சம் மானியத்துடன் பல்வேறு வங்கிகள் மூலம் கடனாக ₹ 91.53 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, அவர்கள் சுய தொழிலைத் தொடங்கியுள்ளனர். பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டத்தின் மூலம் 50 தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க ₹ 1.05 கோடி மானியத்துடன் ₹ 3.24 கோடி வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

38. இவ்வாட்சிப்பரப்பில், சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை தொடங்குவதற்காக ஒற்றைச்சாளர முறையில் 55 விண்ணப்பங்கள் பல்வேறு தொழில் முனைவோர்களிடமிருந்து பெறப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு உரிமங்கள் / அனுமதிகள் பெறுவதற்காக சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பாக, புதிய தொழில்கள் தொடங்குவதற்கான வசதியினை ஏற்படுத்தும் விதமாக 32 வாராந்திர பரிசீலனை மற்றும் எளிதாக்கல் கூட்டங்கள் சம்பந்தப்பட்ட துறைகளுடன் நடத்தப்பட்டுள்ளன.

தகவல் தொழில்நுட்பம்

39. பொதுமக்களுக்கு பொதுச்சேவைகள் எளிதாக சென்றடையும் வகையில் அந்தந்தச் சட்டமன்ற தொகுதிகளில் உள்ள மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் முகாம் அலுவலகத்தில் பொது சேவை மையங்கள் அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. புதுச்சேரியில் 121-ம், காரைக்காலில் 46-ம், மாகியில் 5-ம் மற்றும் ஏனாமில் 7-ம் என 179 பொதுச்சேவை மையங்கள் இவ்வாட்சிப்பரப்பில் இயங்கி வருகின்றன.

40. **“காடுகளை பாதுகாக்க காகிதங்களை குறைப்போம்”** என்ற வகையில் புதுச்சேரி சட்டப்பேரவையினை காகிதப் பயன்பாடில்லா சட்டப்பேரவையாக மாற்றுவதும், பல்வேறு மாநில அரசுத் துறைகளுடன் தகவல் பரிமாற்றத்திற்கான அனைத்துச் செயல் முறைகளை நெறிப்படுத்துவதும் மற்றும் நடந்ததை நடந்தவாரே அதன் உள்ளடங்கினை பொது இணைய முகப்பில் வெளியிடுவதும் போன்றவை “இ-விதான்” என்ற பணிமுறை திட்டத்தின் நோக்கமாகும். மேலும், அண்மைகாலத்து தகவல் தொடர்பு தொழில் நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி சட்டப்பேரவை விவாதங்களில் மிகவும் திறம்பட பங்கேற்பதற்காக தங்களைத் தயார்படுத்திக் கொள்வதற்கு இவ்வாட்சிபரப்பின் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு உதவுவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியும் நடந்து வருகிறது.

தொழிலாளர் நலம்

41. **“தொழிலாளர் நலம் பேணுவதே தொய்வில்லா வளர்ச்சியைத் தரமுடியும்”** என்ற வகையில் பதிவு / உரிமம் / நிர்வாகத்தை புதுப்பித்தல் போன்றவற்றை இணையதளம் வழியாக மேற்கொள்ள தொழிலாளர் அமலாக்க நிர்வாக தரவு அமைப்பு மூலம் மென்பொருள் தொகுப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. 50 தொழில் துறை பயிற்சிகள் அளிக்கப்பட்டதில் நிர்வாகத்தினரும் / தொழிலாளர்களும் பயனடைந்துள்ளனர். இது தவிர, தொழிற்சங்க சட்டம், 1926-ன் கீழ் பதிவதற்காக 14 தொழிற்சங்க விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு அதன் அறிக்கை தொழிற்சங்க பதிவாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. 106 தொழில் துறை சர்ச்சை வழக்குகள் தீர்க்கப்பட்டதன் மூலம் ஊதிய திருத்தத்திற்கான தீர்வு காணப்பட்டு அதன் காரணமாக பல ஊழியர்கள் பயனடைந்துள்ளனர்.

42. புதுச்சேரி கட்டிட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தில் 36,234 நபர்கள் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர். அந்த உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் நீட்டிக்கப்பட்டுள்ளன. அவைகள், மகப்பேறு பயனாக 70 பயனாளிகளுக்கு தலா ₹ 5,000 வீதம் ₹ 3.50 இலட்சமும், ஈமச் சடங்கு உதவியாக 74 பயனாளிகளுக்கு தலா ₹ 7,000 வீதம் ₹ 5.18 இலட்சமும், இறந்த உறுப்பினர்களின் குடும்பத்திற்கு உதவித் தொகையாக 97 பயனாளிகளுக்கு தலா

₹ 70,000 வீதம் ₹ 67.90 இலட்சமும், திருமண உதவித் தொகையாக 75 பயனாளிகளுக்கு தலா ₹ 7,000 வீதம் ₹ 5.25 இலட்சமும், மருத்துவ உதவித் தொகையாக 28 பயனாளிகளுக்கு தலா ₹ 500 வீதம் ₹ 14,000-ம், தீபாவளி பரிசுக் கூப்பன் மூத்த குடிமக்கள் உள்ளடங்களாக 40,369 பயனாளிகளுக்கு தலா ₹ 3,000 வீதம் ₹ 12.11 கோடியும் மற்றும் நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளவர்களுக்கு மழை நிவாரண உதவியாக ₹ 4,000-ம் வழங்கப்பட்டுள்ளது.

43. புதுச்சேரி அமைப்புச் சாரா தொழிலாளர் நலச்சங்கம் தீபாவளி பணப்பரிசாக தலா ₹ 1,000-ஐ தனது உறுப்பினர்களுக்கு ஆண்டு தோறும் வழங்கி வருகிறது. இதனால், 21,094 அமைப்புச் சாரா தொழிலாளர்கள் ₹ 2.11 கோடிக்கு பயனடைந்துள்ளனர். புதுச்சேரி, தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் ஒரு மிகப்பெரும் வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டது. அதில், சுமார் 25 தனியார் நிறுவனங்கள் பங்கேற்றனர்.

44. குழந்தை மற்றும் இளம் பருவ தொழிலாளர் (தடை மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1986-ன்கீழ், இவ்வாட்சிப்பரப்பின் அனைத்து பிராந்தியங்களிலும் தொழிலாளர் துறையின் அமலாக்க அதிகாரிகள் 11,521 ஆய்வுகளை மேற்கொண்டனர். 2021ஆம் ஆண்டு கோவிட்-19 பரவல் காரணமாகவும் மற்றும் கூட்டத்தை தவிர்க்கும் பொருட்டும் வேலை வாய்ப்பகத்தில் பதிந்துள்ளவர்களுக்கு தானாகவே

புதுப்பித்துக் கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால், 18,636 நபர்கள் பயனடைந்துள்ளனர். வேலைவாய்ப்பகத்திற்காக பிரத்தியேகமாக ஒரு யு டியுப் (You Tube) சேனல் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், வேலை தேடுபவர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்காக நடத்தப்படும் அனைத்து நிகழ்ச்சிகளும் யு டியுப் (You Tube) சேனலில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. செங்கல் சூலையிலிருந்து மீட்கப்பட்ட 9 கொத்தடிமை தொழிலாளர்களுக்கு உடனடி மறுவாழ்வு இழப்பீட்டு தொகையாக தலா ₹ 20,000 வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, புதுச்சேரி குழந்தைகள் நலக் குழு மூலம் 5 குழந்தைகளும் மீட்கப்பட்டுள்ளனர்.

உள்ளாட்சி

45. **“நல்லாட்சியின் முக்கிய அங்கம் உள்ளாட்சி”** என்ற வகையில் பொதுசுகாதாரம், குடிமை வசதிகளை வழங்குதல் மற்றும் கண்காணித்தலை தவிர்த்து, வேறுசில குறிப்பிடத்தக்க பணிகளான பொலிவுறு நகரத்திட்டம், நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம், தூய்மை இந்தியா திட்டம் (நகர்ப்புறம்) போன்ற திட்டங்களை இவ்வாட்சிப்பரப்பினை வளர்ச்சி அடைந்த நகரமாக மாற்றுவதற்காக செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். பொலிவுறு நகரம் திட்டத்தின்கீழ், 4 திட்டங்கள் ₹ 1.25 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

46. **“சுத்தம் சோறு போடும்”** என்ற பழமொழிக்கேற்ப உயர்தூய்மை மற்றும் சுகாதார தர நிலைகளை அடைய புதுச்சேரி நகரப் பகுதிகள் முழுவதும் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. தனி வீடுகளில் கழிப்பறைகளை கட்டுவதற்காக 5,646 பயனாளிகளுக்கு நிதி உதவி வழங்கப்பட்டதில் 5,162 பயனாளிகள் ஒரு கழிப்பறையை ₹ 20,000ம் செலவில் கட்டிமுடித்துள்ளனர். இதற்கான மொத்த செலவினம் ₹ 10.32 கோடியாகும். சமுதாயக் கழிப்பறைகள் / பொதுக் கழிப்பறைகள் பிரிவின்கீழ், 128 சமுதாயக் கழிப்பறைகளும் மற்றும் 106 பொதுக் கழிப்பறைகளும் ₹ 2.30 கோடி செலவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. மேலும், ₹ 60 இலட்சம் செலவில் புதுச்சேரி நகராட்சியில் 2 நடமாடும் கழிப்பறைகளும், உழவர்கரை நகராட்சியில் 2 நடமாடும் கழிப்பறைகளும், மற்றும் காரைக்கால் நகராட்சியில் ஒரு நடமாடும் கழிப்பறையும் செயல்பாட்டில் உள்ளன. திடக்கழிவு மேலாண்மை செயல் முறைகளான மறுசுழற்சி செய்தல், எருவாக்குதல், மண்புழு உரம், மீத்தேன் வாயு மற்றும் உயிரி-மீத்தேன் வாயு போன்றவற்றை நகர உள்ளாட்சி அமைப்புகள் ₹ 2.93 கோடி செலவில் செயல்படுத்தி வருகின்றன.

47. தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ், பல்வேறு திட்டங்களின் பணிகளை மேற்கொள்ள ஐந்து நகராட்சிகளுக்கு ₹ 2.32 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ் 1,717 சுய உதவிக் குழுக்களை வலுப்படுத்தி உதவும் பொருட்டு

சுழல் நிதிக் கொடையாக ₹ 1.71 கோடியும் மற்றும் 68 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு உதவுவதற்காக ₹ 34 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. வேலை வாய்ப்புக்கான திறன் பயிற்சி மற்றும் அதன் மூலம் வேலைவாய்ப்பை வழங்கும் திட்டத்தின்கீழ், 1,849 பயிற்சி பெறாத நகர்ப்புற ஏழைகளுக்கு ₹ 1.81 கோடி செலவில் திறன் பயிற்சி வகுப்புகள், அதனை வழங்குபவர்கள் மூலம் நடத்தப்பட்டுள்ளன. பல்வேறு வங்கிகள் மூலம் 1,333 தெருவோர வியாபாரிகளுக்கு வங்கிக் கடன் அனுமதிக்கப்பட்டதில் 1,251 தெருவோர வியாபாரிகளுக்கு தலா ₹ 10,000 வீதத்தில் ₹ 1.25 கோடி வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

காவல்

48. "பாதுகாப்பே மக்களின் பரிதவிப்பை தடுக்க முடியும்" என்பதை உணர்ந்து மத்திய உள்துறை அமைச்சகத்தால் உருவாக்கப்பட்ட அவசர காலங்களில் உதவும் அமைப்பு என்ற திட்டமானது அவசர நிலையில் உள்ள குடிமக்கள் பயன்படுத்துவதற்காக இந்தியா முழுவதற்குமான ஒற்றை எண் (112) அடிப்படையிலான அவசரகால உதவி அமைப்பு ஆகும். எண் 112-க்கு குரல் அழைப்பு, மின்னஞ்சல், அச்ச பொத்தானால் செயல்படுத்தப்படும் அழைப்புகள் மற்றும் இந்தியா 112-க்கான கைப்பேசி செயலி ஆகியவை மூலம் அவசர அழைப்புகளைப் பெறும்

திறன்களை அவசர கால உதவி மையம் பெற்றுள்ளது. இந்திய கடற்கரையை வலுப்படுத்தி கடல் வழியாக ஏற்படும் உடனடி அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்காக கடலோர பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆழமற்ற கடல் பகுதியிலிருந்து 12 நாட்டிகல் மைல் வரையிலான கடல் பகுதியில் ரோந்துப் பணிகளை மாநில காவல்துறை மேற்கொண்டு வருகிறது.

துறைமுகம்

49. **“துறைமுக விரிவாக்கம் பல துறைகளை விரிவடையச் செய்யும்”** என்ற வகையில் கடந்த நிதி ஆண்டில் காரைக்கால் துறைமுகம் 3.05 மில்லியன் டன் சரக்குகளைக் கையாண்டதன் மூலம் ₹ 4.09 கோடி வருவாயை ஈட்டியுள்ளது. காரைக்காலில் இயங்கும் சுய பயன்பாட்டுக் கடல் முனைய வசதி 16,821 டன் திரவ சரக்குகளை கையாண்டதன் மூலம் ₹ 17.95 இலட்சம் வருவாயை ஈட்டியுள்ளது. காரைக்கால் துறைமுகத்தின் செயல்பாட்டினை கண்காணிப்பதற்கு செயல்பாட்டு தணிக்கை மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. துறைமுகத்துறையின் மண்வாரி கப்பலில் பொருத்தமான மணல் வெட்டியெடுக்கும் மோட்டார் இயந்திரம் வாங்கி பொருத்தும் பணி நிறைவுப்பெற்றுள்ளது.

மின்விசை

50. **“ஒப்பற்ற மின் வளர்ச்சியே ஒளிமயமாக்க முடியும்”** என்ற வகையில் மின்வளர்ச்சித் திட்டங்களின்கீழ், பல்வேறு திறன் கொண்ட 14 புதிய பகிர்மான மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு அதன் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. 29 கிலோ மீட்டர் உயர்மின் அழுத்தப் பாதைகளும் மற்றும் குறைந்த மின் அழுத்த பாதைகளும் அமைக்கப்பட்டுள்ளன. புதியதாக 6 உயர்மின் அழுத்த தொழிற்சாலைகளுக்கும் மற்றும் 19 குறைந்த மின் அழுத்த தொழிற்சாலைகளுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 7,216 வீடுகளுக்கும், 1,237 வர்த்தக நிறுவனங்களுக்கும், 21 வேளாண் பம்பு செட்டுகளுக்கும், மற்றும் 86 தெரு விளக்குகளுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 2,607 பழுதான மின் அளவிகள் (Meters) இயல் ஆற்றல் மின் அளவிகளாக (Static Meters) மாற்றப்பட்டுள்ளன. புதை மின்வடம் மாற்றியமைக்கும் திட்டத்தின்கீழ், 67 குறைந்த மின் அழுத்த மேல்நிலை மின் இணைப்புகள் புதைமின்வட அமைப்புகளாக மாற்றப்பட்டுள்ளன. 3 மெகா வாட் மொத்த திறனுள்ள சூரிய மின்சக்தி பேனல்கள் கட்டடங்களின் மேல்தளங்களில் அமைக்கப்பட்டு பகிர்மான மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன.

51. தீனதயாள் உபத்தியாயா கிராம ஜோதி யோஜனா திட்டத்தின்கீழ், 21 பகிர்பான மின்மாற்றிகள் புதுச்சேரியின் கிராமப் பகுதிகளிலும் மற்றும் 7 பகிர்பான மின்மாற்றிகள் காரைக்கால்

பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. மின் நுகர்வோர்களுக்கு 50,570 LPRF மின் அளவிகள் புதுச்சேரி பகுதியிலும் மற்றும் 25,039 LPRF மின் அளவிகள் காரைக்கால் பகுதியிலும் பொருத்தப்பட்டுள்ளன. 850 மின்மாற்றிகளுக்கான மின் அளவிகள் புதுச்சேரி பகுதியிலும் மற்றும் 400 மின் மாற்றிகளுக்கான மின் அளவிகள் காரைக்கால் பகுதியிலும் பொருத்தப்பட்டுள்ளன. 9.32 கிலோ மீட்டர் நீளத்திற்கு 22 KV மின்னூட்டிகள் புதுச்சேரி பகுதியிலும் மற்றும் 22.86 கிலோ மீட்டர் நீளத்திற்கு 11 KV மின்னூட்டிகள் காரைக்கால் பகுதியிலும் இயக்கிவைக்கப்பட்டுள்ளன.

பொதுப் பணிகள்

52. வேகமான பொருளாதார வளர்ச்சிக்கு போதுமான அடிப்படை வசதிகள் முக்கியமானதாகும் என்பதை யாரும் மறுக்க முடியாது. தற்போது நிலவும் பொருளாதார சூழலிலும் கூட இந்த அரசு இவ்வாட்சிப்பரப்பில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த போதுமான நிதியை செலவு செய்துள்ளது.

53. **"சுத்தமான குடிநீர் சுகாதாரத்திற்கு ஆதாரம்"** என்ற வகையில் குடிநீர் வழங்கல் விரிவாக்கம் மற்றும் அதிகரித்தல் திட்டத்தின்கீழ், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி / இரண்டு அடுக்கு மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி கட்டுமானம், குடிநீர் வழங்கல், நீர் உந்துதல், சாலை மறு சீரமைப்பு போன்ற பணிகளும் மற்றும்

அதனைச் சார்ந்த வேலைகளும் இவ்வாட்சிப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் உள்ள 15 இடங்களில் ₹ 72.02 கோடி செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. புதுச்சேரியில் உள்ள சாலை மேம்பாலங்களுக்கான இணைப்புச்சாலைகளின் கட்டுமானம், தற்போதுள்ள சாலைகளை புதுப்பித்தல், காரைக்காலில் மேற்கு புறவழிச்சாலைகளை அமைத்தல், நெடுங்காடு, திருவேட்டக்குடி, காரைக்கால்மேடு சாலைகளை மேம்படுத்துதல் மற்றும் மாகியில் உள்ள முக்கிய சாலைகளை மேம்படுத்தும் பணிகள் ₹ 85.47 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

54. உள்நாட்டுச் சுற்றுலா (சுதேசி தர்ஷன்) திட்டத்தின்கீழ், பாரம்பரியச் சுற்றுலா மற்றும் கடலோரச் சுற்றுலா மேம்பாட்டுப்பணிகள் ₹ 59.19 கோடி செலவில் 6 இடங்களில் சுற்றுலாத் துறையின் மூலம் முடிக்கப்பட்டுள்ளன. மேட்டுப்பாளையத்தில் உள்ள அரசு ஆண்கள் தொழிற்பயிற்சி நிறுவனத்திலும், வம்பாக்கீரப்பாளையத்தில் உள்ள அரசு பெண்கள் தொழிற்பயிற்சி நிறுவனத்திலும், ரோமன் ரோலண்ட் நூலகத்திலும், ஆதிதிராவிடர் நலத்துறையிலும் மற்றும் நெட்டப்பாக்கத்தில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிறுவனத்திலும் மாற்றுத்திறனாளிகளுக்கு தடையற்ற சேவைகள், வாகன நிறுத்துமிடம் மற்றும் கூடுதல் வசதிகளை வழங்கும் பணிகள் ₹ 1.13 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

55. காரைக்கால் பகுதியில் உள்ள கீழவெளியில் இருக்கும் விளையாட்டரங்கு வளாகத்தில் திறந்தவெளிக் கூடம் (கிழக்கு பகுதி) கட்டுவதற்கும் மற்றும் மற்ற அடிப்படை வசதிகளை வழங்குவதற்கும் ₹ 2.57 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. மாகி பகுதியில் உள்ள அனைத்து பள்ளிகளையும் புதுப்பித்தல் / சீரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணிகளும் மேலும், ராஜிவ் காந்தி அரசு தொழிற்பயிற்சி நிறுவன வளாகத்தை சுற்றி மண் அரிப்பை தடுப்பதற்காக தடுப்புச்சுவர் கட்டும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. மாகி பகுதியில் வெள்ளக் கட்டுப்பாடு பணிகளின்கீழ், ₹ 47 இலட்சம் செலவில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வருவாய்

56. "வருவாய் உயர்வாய் இருப்பதே நல்ல திட்டங்களின் அடிப்படை" ஆகும். இவ்வாட்சிப்பரப்பில், இந்து திருமணங்களைத் தாமதமாகப் பதிவு செய்வதில் உள்ள நடைமுறைகளை எளிதாக்கும் வகையில் புதுச்சேரி இந்து திருமணப் பதிவு விதிகள், அக்டோபர் 2021ல் திருத்தப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட விதிகளின்படி, திருமணமான பதினைந்து ஆண்டுகள் வரை இந்து திருமணங்களை சார்-பதிவாளர் பதிவு செய்யலாம். மேலும், திருமண நாளிலிருந்து பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் நாற்பது ஆண்டுகள் வரை திருமணப் பதிவு செய்வதில் தாமதமானால் அதற்கான சிறப்பு அனுமதி வழங்க மாவட்ட திருமணப் பதிவாளருக்கும், 40 ஆண்டுகளுக்கு மேல் தாமதமானால் அத்திருமணங்களைப் பதிவு செய்வதற்கான சிறப்பு அனுமதி வழங்க வருவாய் சிறப்புச் செயலாளருக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

57. மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தின் பரிந்துரையின் அடிப்படையில் இவ்வாட்சிப்பரப்பின் வருவாய்த்துறை அதிகாரிகள் சட்டமுறை வாரிசுதாரர் சான்றிதழ்களை வழங்கும் முறையை உருவாக்கி நவம்பர் 2021ல் இந்த அரசு அரசாணையை வெளியிட்டுள்ளது. இவ்வரசாணையின் படி, புதுச்சேரி / காரைக்கால் பகுதிகளில் உள்ள தாலுக்கா அலுவலகங்களின் வட்டாட்சியர்கள் மற்றும் மாகி / ஏனாம் பகுதிகளில் உள்ள துணை-தாலுக்கா அலுவலகங்களின் துணை வட்டாட்சியர்கள் ஆகியோருக்கு சட்டமுறை வாரிசுதாரர் சான்றிதழ்களை வழங்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், வருவாய்த் துறையின் வட்டாட்சியர்கள் மற்றும் துணை வட்டாட்சியர்களால் வழங்கப்படும் சட்டமுறை வாரிசுதாரர் சான்றிதழ்கள் பொதுமக்களுக்கு, அச்சான்றிதழ்களை பெறுவதற்கான செயல்முறையை எளிதாக்குவதுடன், உரிமையியல் வழக்குகளைத் தாக்கல் செய்வதில் ஏற்படும் சிரமங்கள், தாமதங்கள் மற்றும் மனச்சுமைகள் குறைக்கப்பட்டுள்ளது.

58. கோவிட்-19 தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள புதுச்சேரி மாவட்ட பேரிடர் மீட்பு நிதியிலிருந்து (PDDRF) பல்வேறு துறைகள் / அலுவலகங்களுக்கு ₹ 15.57 கோடி வழங்கப்பட்டுள்ளது. கோவிட் நோயால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் 1,531 குடும்பங்களுக்கு கோவிட் இழப்பீட்டு நிதியாக ₹ 7.65 கோடி வழங்கப்பட்டுள்ளது. ராஜிவ் காந்தி சமூக பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், நிதி உதவியாக 469 பயனாளிகளுக்கு ₹ 1.56 கோடி வழங்கப்பட்டுள்ளது.

ஊரக மேம்பாடு

59. "வறுமை போக்கி வருவாய் பெருக்கும் ஊரக மேம்பாடு" என்ற வகையில் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கி மற்றும் வறுமையை போக்குவதே இந்த அரசின் முதன்மை இலக்காகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உத்திரவாதத் திட்டத்தின்கீழ் 4.78 இலட்சம் வேலை நாட்கள் உருவாக்கப்பட்டு 38,913 கிராமப்புற குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். இதன் மூலம், ₹ 11.31 கோடி செலவில் 74 பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. புதுச்சேரியைத் திறந்த வெளிக் கழிப்பிடங்கள் இல்லா பகுதியாக்கும் பராமரிப்புப் பணிகளுக்காக (ODF Plus) மொத்தமுள்ள 108 கிராமங்களில் 70 கிராமங்கள் திறந்தவெளிக் கழிப்பிடங்கள் இல்லா பகுதியாக்கும் பராமரிப்பு பணிகளுக்காக கண்டறியப்பட்டுள்ளன. சமூக உறிஞ்சிக்குழி மாதிரியைப் பின்பற்றி மணமேடு கிராமத்தில் கழிவு நீர் மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது மற்றும் இதேபோல் இரண்டு மாதிரிகள் செயல்பாட்டிற்கு உட்படுத்தப்பட உள்ளன. சமூக உறிஞ்சிக்குழிகளை கட்டுவதற்காக மேலும் 23 கிராமங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

பள்ளிக் கல்வி

60. "பள்ளிக் கல்வியே பலமான தலைமுறைக்கு அடித்தளம்" என்ற வகையில் வாழ்க்கைச் சூழலை மாணவர்கள் கையாளுதலையும் மற்றும் ஒருவருடைய தனித்தன்மையை உருவாக்குவதிலும் பள்ளியில் பயிலுதல் முக்கிய காரணியாக இருக்கிறது. பள்ளிக் கல்வியை வலுப்படுத்துவதில் உடற்பயிற்சி கல்வியின் மேம்பாடும் உள்ளடங்கி இருக்கிறது. மாணவர் சமூகத்தினரிடையே விளையாட்டு நடவடிக்கைகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு புதுச்சேரி தவளக்குப்பம் மற்றும் ஏனாம் கனகலாப்பேட் ஆகிய இடங்களில் 2 உள்விளையாட்டு அரங்கு வசதிகள் கட்டப்பட்டுள்ளன. காரைக்காலில் உள்ள திருநள்ளாறு மற்றும் T.R. பட்டினத்தில் 2 கைப்பந்து மண் மைதானங்கள் தலா ₹ 10 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன. 2021-22ஆம் ஆண்டில், 42 பள்ளி செல்லாக் குழந்தைகளை உறைவிடம் சாராத சிறப்புப் பயிற்சி திட்டத்தின்கீழ் கொண்டுவர ₹ 1.89 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

61. மத்திய கல்வி அமைச்சகத்தால் நடத்தப்பட்ட தேசிய அளவிலான கலா உத்சவ் போட்டியில் இவ்வாட்சிப்பரப்பின் மாணவர்கள் மூன்று முதல் பரிசுகளையும் மற்றும் ஒரு இரண்டாம் பரிசினையும் வென்றுள்ளனர். இதில், இரண்டு முதல் பரிசுகளை அரசு பள்ளியில் பயிலும் மாணவர்கள் வென்றுள்ளனர். பரிசு பட்டியலின் அடிப்படையில் இவ்வாட்சிப்பரப்பு இந்தியாவில் உள்ள

மற்ற மாநிலங்களுக்கிடையில் முதன்மை இடத்தைப் பிடித்துள்ளது. பெண்களுக்கு அதிகாரமளித்தல் குறித்து மாணவியரை உத்வேகப்படுத்தி, ஊக்கப்படுத்தி மற்றும் தற்பாதுகாப்பு பயிற்சி அளிக்க, ₹ 51.57 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 2021-22ஆம் ஆண்டில் அனைத்து அரசு பள்ளிகளுக்கும் நூலகங்களுக்கான புத்தகங்கள் வாங்க ₹ 40.54 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

62. கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ், மாணவர்களுக்கு இலவச சீருடை மற்றும் பாடப்புத்தகங்கள் வழங்குவதற்காக ₹ 4.50 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. அரசு பள்ளிகளைப் பராமரிப்பதற்காக ₹ 1.70 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாட்சிப்பரப்பிலுள்ள அரசு பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு NCERT பாடப் புத்தகங்களும் மற்றும் இளநிலை மழலையர் பள்ளி மற்றும் மேல்நிலை மழலையர் பள்ளி உட்பட ஒன்று முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பயிற்சி நோட்டு புத்தகங்களும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. தமிழ், தெலுங்கு மற்றும் அரேபிய மொழிப் பாடங்களுக்கான கௌரவப் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு 69 நபர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிகள் வழங்கப்பட்டுள்ளன.

63. புதுச்சேரி ஏம்பலத்தில் உள்ள மறைமலை அடிகள் அரசு மேல்நிலைப் பள்ளியிலும் மற்றும் முருங்கப்பாக்கத்தில் உள்ள தீரர் சத்தியமூர்த்தி அரசு மேல்நிலைப்பள்ளியிலும் 2 புதிய அடல் சீராக்க

ஆய்வுக் கூடங்கள் (Atal Tinkering Laboratories) தலா ₹ 20 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. புதிய மற்றும் புதுமையான யோசனைகளை சமர்பித்த 58 மாணவர்கள் தங்களது யோசனைக்கு ஏற்ற இயங்குநிலை இயந்திர மாதிரியைத் தயாரிக்க புதுடில்லியில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை தலா ₹ 10,000ஐ பரிசாக வழங்கியுள்ளது. 8வது தேசிய அளவிலான கண்காட்சி மற்றும் செயல் திட்டப் போட்டிகளில் பங்கேற்ற காரைக்கால் பகுதியைச் சேர்ந்த எட்டாம் வகுப்பு மாணவன் ஆதவன் சோமசுந்தரம் தேசிய அளவில் முதல் 24 மாணவர்களுள் ஒருவராக தேர்வாகி மடிக்கணினியை பரிசாகப் பெற்றுள்ளார்.

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல்

64. குளியல் நீருக்கான தரத்தையும் மற்றும் நீலக் கடற்கரையின் அளவு கோலையும், பராமரித்ததால், டென்மார்க்கை சார்ந்த லாப நோக்கமற்ற சுற்றுச் சூழல் கல்வி அறக்கட்டளை வழங்கிய சர்வதேச நீலக் கடற்கரைச் சான்றிதழை சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மைக் கழகம் மூலம் புதுச்சேரியில் முதலில் பெற்ற கடற்கரை, சின்ன வீராம்பட்டினத்தில் உள்ள ஈடன் கடற்கரையாகும் என்பதைத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

65. புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டுக் குழுமம், சென்னையில் உள்ள புவி அமைச்சகத்தின் தேசிய கடல்சார் ஆராய்ச்சி மையத்தினுடைய நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் நிகழ்நேர அடிப்படையில் கடல் நீரின் தரத்தை கண்காணிப்பதற்காக புதுச்சேரி கடலில் நிகழ் நேரத்தில் நீரின் தரத்தை கண்காணிக்கும் மிதவையை நிறுவியுள்ளது. வருடாந்திர மற்றும் மாதாந்திர அறிவியல் மின்-நாட்காட்டிகளை புதுச்சேரி சுற்றுச் சூழல் தகவல் அமைப்பு மையம் வெளியிட்டுள்ளது. இதில், முக்கிய அறிவியல் நிகழ்வுகள், முக்கிய சுற்றுச் சூழல் நாள், பிரபலமான நபர்களின் பிறந்த நாட்கள், ஐக்கிய நாடுகளால் கடைபிடிக்கப்படும் சர்வதேச நாட்கள் போன்ற தகவல்கள் இடம் பெற்றுள்ளன. இந்த மின்-நாட்காட்டிகள் அரசுத் துறைகளுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் பயனுள்ளதாக உள்ளது. ஒருமுறைப் பயன்படுத்தப்படும் நெகிழி (Plastic) பொருட்களுக்கான மாற்றுப் பொருட்களின் விற்பனை அங்காடியான “சோலை” பாகூரில் திறக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளை நிறுவுதல் மற்றும் இயக்குதலுக்கான ஒப்புதல்களை வழங்குதல், தொழிற்சாலைகளுக்கான உரிமங்களை புதுப்பித்தல் போன்றவை இணையவழி மூலமாக வழங்கப்படுகின்றன.

சமூக நலம்

66. **“சமூக நலமே சமூகத்தின் பலம்”** என்ற வகையில் மாற்றுத்திறனாளிகள் சமூக நிலையில் உயர்வதை நோக்கமாகக் கொண்டு பல்வேறு நலத்திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி

வருவதுடன் அவர்களுக்கு சமமான வாய்ப்பினை உறுதி செய்து இந்த சமுதாயத்தில் சாதாரண மனிதரைப் போல் அவர்களையும் உயர்ந்த நிலையை அடையச் செய்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துக் கொள்வர். சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி மாற்றுத்திறனாளிகளுக்கு பிரத்தியேக அடையாள அட்டை வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டு, இவ்வாட்சிப்பரப்பில் இதுவரையில் 17,862 பிரத்தியேக அடையாள அட்டைகள் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

67. **"மாற்றுத்திறனாளிகளின் வாழ்வில் மாற்றம் கொண்டுவரவும் ஏற்றம் பெறவும்"** இந்த அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்களின்கீழ், 20,128 மாற்றுத்திறனாளிகள் பயனடைந்துள்ளனர். மாற்றுத்திறனாளிகளுக்கான ஓய்வூதியம் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து ₹ 500 உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. 20,128 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர நிதி உதவி ₹ 2,000 முதல் ₹ 3,800 வரை வழங்கப்பட்டுள்ளது. இதற்காக, கடந்த ஆண்டு ₹ 63.96 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. 20,128 மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச அரிசிக்கு பதிலாக பண உதவி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக, ₹ 4.56 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. 84 மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு பத்தாம் வகுப்புக்கு முந்தைய மற்றும் பிந்தைய கல்வி உதவித் தொகையாக

₹ 13.27 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளின் ஈமச்சடங்கினை செய்வதற்காக 221 மாற்றுத்திறனாளிகளின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுக்கு கருணைத் தொகையாக ₹ 22.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இலவச துணிகளுக்கு பதிலாக 16,265 மாற்றுத்திறனாளிகளுக்கு பண உதவியாக ₹ 81.33 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 70 கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச வானொலிகள் வழங்கப்பட்டுள்ளன.

68. இந்திரா காந்தி விளையாட்டு வளாகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு நாள் கொண்டாடப்பட்டது. இதில், சுமார் 400 மாற்றுத்திறனாளிகள் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளில் பங்கேற்றனர். இந்த விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் மற்றும் 39 மாநில விருதுகளும் மாற்றுத்திறனாளிகளுக்கான சர்வதேச நாளன்று வழங்கப்பட்டது.

69. **"நல்ல பாதை காட்டும் போதைத்தடுப்பு"** என்ற வகையில் போதைப்பொருள் தடுப்புக்கான தேசிய செயல் திட்டத்தின்கீழ், போதைப்பொருள் தடுப்பு மற்றும் சட்ட விரோத கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினத்தையொட்டி போதைப்பொருட்களின் தீமை மற்றும் தடுப்பு குறித்து விழிப்புணர்வு பதாகைகள் புதுச்சேரி மற்றும் காரைக்காலில் உள்ள முக்கிய பகுதிகளில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும், குழந்தைகள் பாதுகாப்பு நிறுவனங்களில் உள்ள 600 குழந்தைகளுக்கு போதைப்பொருள் தடுப்பு குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

நகர மற்றும் கிராமத் திட்டமிடல்

70. "வேகமான வளர்ச்சி நலம் தரும் நகர மற்றும் கிராமத் திட்டமிடல்" என்ற வகையில் இந்தச் சமுதாயத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினரை பாதுகாக்கும் விதமாக அவர்கள் வாழும் பகுதிகளில் நன்கு கட்டி முடிக்கப்பட்ட வீடுகளை அவர்களுக்கு வழங்குவதும் மற்றும் இதர குடிமை வசதிகளை பராமரித்தலும் உள்ளடங்களாக பல்வேறு நலத்திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இதையொட்டி, புதுச்சேரி கண்டாக்டர் தோட்டத்திலுள்ள குடியிருப்புகளுக்கு ₹ 97.80 இலட்சம் மதிப்பீட்டு செலவில் மின் அளவீடு பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன. புதுச்சேரி துப்புராயப்பேட்டையில் இலவச மனைப் பட்டா (Land Grant Rule) மனைப்பிரிவு பகுதியில் இருக்கும் புதிய மற்றும் பழைய குடியிருப்புகளுக்கு மண் சாலைகளுக்கு பதிலாக கான்கிரீட் சிமெண்ட் சாலைகள் ₹ 23.30 இலட்சம் மதிப்பீட்டு செலவில் அமைக்கப்பட்டுள்ளன. காரைக்கால் கீழகாசக்குடியில் உள்ள வள்ளியம்மை நகரில் கழிவுநீர் வடிகாலுடன் கூடிய கான்கிரீட் சிமெண்ட் சாலைகள் ₹ 79.80 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

71. பாரதப் பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின்கீழ், இதுவரையில் 15,650 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. மேலும், பயனாளிகளின் பங்களிப்புடன் கூடிய கட்டுமானப் பணிகளின்கீழ் / கூடுதலாக 1,510 வீடுகள் கட்ட வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்திடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டு 2021-22ஆம் ஆண்டில் 720 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. புதுச்சேரி நகர அமைப்பு குழுமம் வாயிலாக சாதாரண குடியிருப்பு கட்டிடங்களுக்கு கட்டிட திட்ட வரைபட அனுமதியையும் மற்றும் புதுச்சேரி மற்றும் காரைக்காலில் ஒருங்கிணைந்த வளர்ச்சி திட்டப்பகுதிக்கு வெளியே அமைந்துள்ள அனுமதி பெறாத மனைப்பிரிவில் உள்ள தனி மனைகளை ஒழுங்குபடுத்தும் நடைமுறைகள் பொதுமக்களுக்கு எளிதாக்கும் வகையில் இணையதளம் மூலம் வழங்கப்படுகிறது.

சுற்றுலா

72. **“சுற்றுலா மகிழ்வூட்டும் அதே சமயம் பொருளீட்டும்”** என்ற வகையில் புதுச்சேரியில் சுற்றுலா ஈர்ப்புகளான பிரெஞ்சு பாரம்பரியம், கடற்கரைகள், உப்பங்கழி மற்றும் கலாச்சார பாரம்பரியம் போன்றவை இந்தியா மற்றும் வெளிநாடுகளில் வாழும் மக்களின் மனங்களில் எதிரொலித்த வண்ணம் உள்ளன. இந்த அரசு, சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக வெவ்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு திட்டங்களை ஊக்கப்படுத்தி உள்ளது. கோவிட் காலத்திற்கு பிறகு, சுற்றுலா மெதுவான வேகத்தைப் பெற்று சுற்றுலாப்பயணிகளின் வருகையில் 6.50 விழுக்காடு வளர்ச்சியை பெற்றுள்ளது.

73. முருங்கப்பாக்கத்தில் ₹ 4.50 கோடியில் பிராங்கோ-தமிழ் கிராமமும், பழைய சாராய வடிசாலை வளாகத்தில் ₹ 12.85 கோடியில் கலாச்சார வளாகமும், பழைய துறைமுகம் பகுதியில் ₹ 3.75 கோடியில் மாநாட்டு அரங்கமும், கிருமாம்பாக்கம் ஏரியினை ₹ 6 கோடி செலவில் மேம்படுத்தும் பணிகளும், நேரு வீதி மற்றும் பெரிய வாய்க்கால் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகள் ₹ 5.50 கோடி செலவில் புதுச்சேரியிலும் மற்றும் அம்பகரத்தூரில் உள்ள ஸ்ரீ பத்ரகாளி அம்மன் கோயிலில் ₹ 2.75 கோடியிலும், T.R. பட்டினத்தில் உள்ள ஸ்ரீ ஜடாபுரிஸ்வரர் கோயிலில் ₹ 2.65 கோடியிலும், திருநள்ளாற்றில் உள்ள ஆன்மீகப் பூங்கா ₹ 7.50 கோடியிலும், மற்றும் இரண்டு திருக்குளங்களுக்கு ₹ 2.20 கோடி செலவில் காரைக்காலிலும் மேம்பாட்டு பணிகள் மத்திய நிதி உதவியுடன் நிறைவுபெற்ற திட்டங்களாகும். மேலும், வில்லியனூரில் உள்ள திருக்காமேஸ்வரர் கோயிலில் ₹ 4.45 கோடியிலும் மற்றும் திருக்காஞ்சியில் உள்ள ஸ்ரீ கங்கை வராகநதீஸ்வரர் கோயிலில் ₹ 5.50 கோடியிலும் மேம்பாட்டு பணிகள் நிறைவடைந்துள்ளன.

போக்குவரத்து

74. **“ஆக்கப் பூர்வமான போக்குவரத்துத் திட்டங்கள்”** என்ற வகையில் புதுச்சேரி மற்றும் கடலூர் இடையே இரயில்வே போக்குவரத்துக்கான திட்டம், மறு ஆய்வு செய்யப்பட்டு திட்ட

வரைவுகோளுக்கான ஒப்புதலை இரயில்வே வாரியம் வழங்கியதன் மூலம் பொதுமக்களின் நீண்டகால எதிர்பார்ப்புகள் நிறைவேறியுள்ளது. இதன் பொருட்டு, இறுதி நிலை வழித்தட அளவீடு செய்யவும், திட்டப்பணிகளை தயாரிக்கவும், மற்றும் மண்தர ஆய்வு பணிகளை மேற்கொள்ளவும் தெற்கு இரயில்வே இசைவுக் கடிதம் அளித்துள்ளது. காரைக்கால் மாவட்டத்தில், காரைக்காலிலிருந்து பேரளத்திற்கான அகல இரயில் பாதை அமைப்பதற்கான பணி ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்காக, ஏற்கனவே இருக்கும் காரைக்கால்-பேரளம் இரயில்வே பாதையில் இரயில்வே தளம், வரையறுக்கப்பட்ட பயணியர் சுரங்கப்பாதை, மேம்பாலங்கள், சிறிய பாலங்கள், பெரிய பாலங்கள் உருவாக்க தென்னக இரயில்வேயால் ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. மேலும், இரயில்வே நிலைய கட்டிடம், லெவல் கிராசிங் மற்றும் பிற கட்டிடங்களுக்கு ஒப்பந்தம் தயார் நிலையில் உள்ளது. பெண்களுக்கு பழகுநர் உரிமம் மற்றும் ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்காக ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் அதற்கான தேர்வு புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் நடத்தப்படுகின்றன.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்

75. “உணர்வுகளுக்கு கை கொடுப்போம் உயர்வுக்கு பாலம் அமைப்போம்” என்ற வகையில் இவ்வாட்சிப்பரப்பில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின மக்களின்

ஒட்டு மொத்த வளர்ச்சிக்கான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இதன் ஒரு பகுதியாக, இந்தச் சமுதாயத்தின் மாணவர்கள் பயன்பெறும் வகையில் புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிகளில் ₹ 2.32 கோடி செலவில் மாணவர் / மாணவியர் விடுதிகள் இயங்கி வருகின்றன.

76. மக்கள் தலைவர் தியாகி வி. சுப்பையா விருது திட்டத்தின்கீழ், பள்ளி இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு பணப்பரிசு வழங்கப்பட்டுள்ளது. 2021-22ஆம் ஆண்டில் மெட்ரிக் வகுப்புக்கு முற்பட்ட படிப்புக்கான உதவித்தொகை திட்டத்தின்கீழ், 200 பிற்படுத்தப்பட்ட மாணவர்களும் மற்றும் மெட்ரிக் வகுப்புக்கு பிற்பட்ட படிப்புக்கான உதவித்தொகை திட்டத்தின்கீழ், 1,316 பிற்படுத்தப்பட்ட மாணவர்களும் பயனடைந்துள்ளனர். 2021-22ல் மெட்ரிக் வகுப்புக்கு முற்பட்ட படிப்புக்கான உதவித்தொகை திட்டத்தின்கீழ், 3,960 சிறுபான்மையின மாணவர்களும் மற்றும் மெட்ரிக் வகுப்புக்கு பிற்பட்ட படிப்புக்கான உதவித்தொகை திட்டத்தின்கீழ் 596 சிறுபான்மையின மாணவர்களும் பயனடைந்துள்ளனர். 2021-22ல் புதுடெல்லியில் உள்ள தேசிய பிற்படுத்தப்பட்ட மற்றும் நிதி மேம்பாட்டுக் கழகத்திற்கு கடன் நிலுவைத் தொகையாக ₹ 9.42 கோடி திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

77. "மகளிர் மற்றும் குழந்தைகள் உயர்வே உண்மையான குறியீடு" என்ற வகையில் சமூக, பொருளாதார, சுகாதார மற்றும் ஊட்டச்சத்து நிலையில் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடடைய இந்த அரசு மிக அதிகமான கவனம் செலுத்தி வருகிறது. அதன்படி, ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டத்தில் சேர்ந்துள்ள 6 மாதம் முதல் 6 வயதுள்ள குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் / பாலூட்டும் தாய்மார்களுக்கு வருடத்தில் 300 நாட்களுக்கு 855 அங்கன்வாடி மையங்கள் மூலம் ஊட்டச்சத்துமிக்க இணை உணவு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், ஊட்டச்சத்துமிக்க இணை உணவு வழங்குவதற்காக ₹ 8.40 கோடி செலவு செய்யப்பட்டு 31,332 குழந்தைகளும் மற்றும் 9,728 தாய்மார்களும் பயனடைந்துள்ளனர். மேலும், ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டத்தில் பயனாளிகளுக்கு விடுமுறை நாட்களுக்கான இணை உணவு, வீடுகளுக்கே கொண்டு சென்று வழங்கப்பட்டு வருகிறது.

78. "வறுமையால் வாடும் பெண்களின் வாழ்வை வளமாக்குவோம்" என்ற அடிப்படையில் ஏழைப் பெண்களின் திருமணத்திற்காகவும் மற்றும் விதவைகளின் மகள் திருமணத்திற்காகவும் நிதி உதவியாக ₹ 25,000 முறையே 800 மற்றும் 100 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு பெண் /

இரண்டு பெண் குழந்தைகள் உள்ள, குடும்பக்கட்டுப்பாடு செய்து கொண்ட பெற்றோர்களுக்கான, உதவித்தொகை 150 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களுக்கான உதவித்தொகையாக மொத்தம் ₹ 2.70 கோடி வழங்கப்பட்டுள்ளது.

79. **“குழந்தை நலம் பேணுதலே குடும்ப நலம் பேணுதல்”** என்ற வகையில் பிரதம மந்திரியின் மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ், 4,039 கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு அவர்களது முதல் குழந்தைப் பேற்றுக்காக மொத்தம் ₹ 2.48 கோடி வழங்கப்பட்டுள்ளது. இந்த அரசு, முதியோர்கள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், விதவைகள், திருமணமாகாத பெண்கள் மற்றும் திருநங்கைகளுக்கு மாதாந்திர ஓய்வூதியத்தை வழங்கி தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். அந்த வகையில், 2021-22ல் 1,64,847 பயனாளிகள் பயனடையும் வகையில் ₹ 436.44 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2,000 இறந்த ஓய்வுதியதாரர்களின் ஈமச்சடங்கினைச் செய்வதற்கான நிதி உதவியாக மொத்தம் ₹ 2 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

80. **“பொங்கலோடு குடும்பங்களில் மகிழ்ச்சியும் பொங்க வேண்டும்”** என்ற அடிப்படையில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இலவச வேட்டி சேலைக்கு ஈடாக குறைந்தபட்சம் இரண்டு

குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட 1,14,929 குடும்ப உணவு பங்கீட்டு சிவப்பு அட்டைதாரர்களுக்கு ₹ 1,000-ம் மற்றும் ஒரே ஒரு உறுப்பினர் கொண்ட 12,860 குடும்ப உணவுப் பங்கீட்டு சிவப்பு அட்டைதாரர்களுக்கு ₹ 500-ம் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக, 2021-22ல் ₹ 12.14 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு மற்றும் கவனிப்பு தேவைப்படும் குழந்தைகளின் நன்மைக்காகவும் மற்றும் குழந்தைகளின் நலனுக்காகவும் இந்த அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதேபோல், 28 குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களுக்கு மானியக் கொடையாக ₹ 4.25 கோடியை குழந்தைகளின் பராமரிப்புச் செலவுக்காக வழங்கப்பட்டுள்ளது.

81. **“பெருந்தொற்று காலத்தில் பேருதவியாக”** இவ்வாட்சிப்பரப்பில், கொரோனா பெருந்தொற்றால் இரண்டு பெற்றோர்களையும் இழந்த 11 குழந்தைகள் மற்றும் ஒரு பெற்றோரை இழந்த 378 குழந்தைகள் கண்டறியப்பட்டு அவர்களின் மறுவாழ்விற்கு தேவையான உணவு, உடை, இருப்பிடம் மற்றும் கல்வி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இரண்டு பெற்றோரையும் இழந்த 11 குழந்தைகளுக்கு நிதி உதவியாக ₹ 10 இலட்சம் பெறுவதற்காக “பாரதப்பிரதமரின் குழந்தைகள் அரவணைப்பு” என்ற இணைய முகப்பில் பதியப் பெற்றுள்ளனர். இதற்கிடையில், கொரோனா பெருந்தொற்றால் இரண்டு பெற்றோரையும் இழந்த 11 குழந்தைகளுக்கு சூன் 2021 முதல் நவம்பர் 2021 வரை மாதத்திற்கு ஒரு குழந்தைக்கு

₹ 2,000 என மொத்தம் ₹ 1.32 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கொரோனா தொற்றுக்கு பிந்தைய பராமரிப்பு உதவித் திட்டத்தின்கீழ், 18 வயது முதல் 21 வயது வரை உள்ள 34 பயனாளிகளின் பராமரிப்பிற்காக பயனாளி ஒருவருக்கு மாதத்திற்கு ₹ 2,000 வீதம் ₹ 5.44 இலட்சம் குழந்தைகள் பாதுகாப்பு இல்லத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்

82. "ஆதி திராவிடர் மற்றும் நம் ஆதி மக்கள் மீது காட்டும் அதீத அக்கறையாக" மத்திய அரசின் கூடுதல் நிதி உதவியுடன், ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் சிறந்த அணுகுமுறையுடன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரை சமூக-பொருளாதார மற்றும் கல்வியில் மேம்பாடு அடையச் செய்வதே இந்த அரசின் முக்கிய நோக்கமாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின்கீழ், 6 பயனாளிகளுக்கு முதல் தவணை தொகையாக ₹ 9 இலட்சமும், 80 பயனாளிகளுக்கு இரண்டாம் தவணைத் தொகையாக ₹ 1.20 கோடியும் மற்றும் 80 பயனாளிகளுக்கு மூன்றாம் தவணைத் தொகையாக ₹ 80 இலட்சமும் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், பாரத ரத்னா ராஜிவ் காந்தி கல் வீடு கட்டும் மானியத் திட்டத்தின்கீழ், நன்கு வடிவமைக்கப்பட்ட கல்வீடு கட்ட 4 பயனாளிகளுக்கு இரண்டாம் தவணைத் தொகையாக ₹ 6 இலட்சமும், மற்றும்

7 பயனாளிகளுக்கு மூன்றாம் தவணைத் தொகையாக ₹ 7 இலட்சமும் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஏழை ஆதி திராவிட / பழங்குடியின பெண்களுக்குத் திருமண நிதி உதவியாக ₹ 75,000 வழங்கப்பட்டதன் மூலம் 396 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக, ₹ 2.97 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

83. **"பாலூட்டும் தாய்மார்களுக்கு பலம் கூட்டும்"** வகையில் கருவுற்ற மற்றும் பாலூட்டும் அட்டவணை / பழங்குடி இனத் தாய்மார்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின்கீழ், 2021-22ஆம் ஆண்டில் 644 தாய்மார்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக, ₹ 92.40 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. தொடர் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ள அட்டவணை / பழங்குடி இன குடும்பங்களுக்கு உதவும் வகையில் இந்த அரசு மாதந்தோறும் நிதி உதவியாக ₹ 3,000 வழங்கியுள்ளது. இதற்காக, 2021-22ஆம் ஆண்டில் 1,555 அட்டவணை இன / பழங்குடி இனப் பயனாளிகளுக்கு ₹ 5.59 கோடி வழங்கப்பட்டுள்ளது.

84. **"தீண்டாமையை தீண்டாமையாக்கும் விதமாக"** இந்தச் சமூகத்திலிருந்து தீண்டாமையை நீக்கும் பொருட்டு கலப்புத் திருமணத் தம்பதியர்களுக்கு ஊக்கத் தொகையாக ₹ 2.50 இலட்சம், நிரந்தர வைப்பு நிதியாக வழங்கப்பட்டு, இதன் மூலம் 226 தம்பதியர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக,

₹ 5.65 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. ஏழை அட்டவணை / பழங்குடி இனக் குடும்பத்தில் இறந்தவர்களின் இறுதிச் சடங்கினை மேற்கொள்ள நிதி உதவியாக 899 குடும்பங்களுக்கு தலா ₹ 15,000 வழங்கப்பட்டு, இதற்காக ₹ 1.34 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. அட்டவணை / பழங்குடி இனக் குடும்பங்களுக்கு கழிப்பறைகள் கட்டுவதற்காக ₹ 20,000 வழங்கப்பட்டுள்ளது. இதில், இரண்டாம் தவணையாக 9 பயனாளிகளுக்கு தலா ₹ 10,000 வீதம் ₹ 90,000 வழங்கப்பட்டுள்ளது.

85. "அட்டவணை இன மக்களின் அன்பான துணையாகவும் பழங்குடி மக்களின் பாசப்பிணைப்பாகவும்" இவ்வாட்சிப்பரப்பில் உள்ள அட்டவணை / பழங்குடியினர் வசிக்கும் குடியிருப்பு பகுதிகளில் அடிப்படை மற்றும் குடிமை வசதிகளுக்கான சாலை வசதிகள், குடிநீர் வழங்கல், பக்க வடிகால், சமுதாய நலக் கூடம் மற்றும் சுகாதாரமான கழிப்பிட வசதிகளை மேற்கொள்ள பாட்கோ மற்றும் ஏனாம் நகராட்சிகளுக்கு மானியக் கொடையாக ₹ 19.80 கோடி வழங்கப்பட்டுள்ளது. அட்டவணை / பழங்குடி இன வன்கொடுமை தடுப்புச் சட்டம், 1989, திருத்திய சட்டம், 2015 மற்றும் விதிகள், 2016ன் கீழ் பாதிக்கப்பட்ட 24 நபர்களுக்கு நிவாரண நிதியாக ₹ 24.68 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

86. இவ்வாட்சிப்பரப்பில், 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து அட்டவணை மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வேட்டி சேலைக்கு மாற்றாக தலா ₹ 500 வீதம் 2021ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகைக்காக 1,24,412 பயனாளிகளுக்கு ₹ 6.22 கோடியும் மற்றும் 2022ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்காக 1,24,940 பயனாளிகளுக்கு ₹ 6.25 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 3,816 அட்டவணை / பழங்குடி இன மாணவர்களின் கல்வி மேம்பாடு, பயிற்சி மற்றும் சுய வேலை வாய்ப்பு உட்பட இலவச கல்வி திட்டத்திற்காக ₹ 9.26 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

87. **"அனைத்து அடிப்படைத் தேவையை அளித்து அரணாக அரசு செயல்படும் நோக்கத்தோடு"** இந்த அரசு, இவ்வாட்சிப்பரப்பில் உள்ள மக்களுக்கு கல்வி, சுகாதாரம், தூயகுடிநீர், வேலை வாய்ப்பை உருவாக்கி மற்றும் உறுதியான சமூக பொருளாதார வளர்ச்சியை வழங்குவதில் முழு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது என்பதை இந்த மேன்மைமிக்க அவையின் அனைத்து மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துக்கொள்வர் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

88. பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்கான ஒத்துழைப்பையும் மற்றும் மதிப்புமிக்க பரிந்துரைகளையும் அனைவரும் நல்குவீர்கள் என்றும் இந்த மேன்மைமிக்க அவையின் கூட்டத்தொடரை ஆக்கப்பூர்வமான விவாதங்களுக்காக மாண்புமிகு உறுப்பினர்கள் பயன்படுத்திக் கொள்வீர்கள் என்றும் நான் நம்புகிறேன்.

89 . இந்தக் கூட்டத்தொடரில் மேற்கொள்ளப்படும் கலந்தாய்வு விவாதங்கள் வெற்றிபெற உங்களை வாழ்த்துகிறேன்.

ஜெய்ஹிந்த்....

நன்றி !

வாழ்க பாரதம்!!

வளர்க புதுச்சேரி !!!

ஒவ்வொரு வீட்டிலும் தேசியக் கொடி

ஒவ்வொரு வீட்டிலும் தேசியக் கொடி

13-8-2022 *முதல்* **15-8-2022** *வரை*

வடிவமைப்பு மற்றும் அச்சிட்டோர் : அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி – 605 009.